26 APR 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 14 புதன்கிழமை (26 - 04 - 2000) VALAMPURI ஒலி: 129

## ★ ஆனையிறவுத்தளத்தைஇழந்த அரசாங்கம் யாழ்ப்பாணத்தை எப்படி தக்கவைக்கப் போகிறது?

## ஜனாதிபதியிடம் ரணில் கேள்வி

(நமது நிருபர்)

ஆனையிறவு படைத்தளத்தை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதை அடுத்து இலங்கை இராணுவம் பாரிய இராணுவப்பின்னடைவு ஒன்றை சந்தித்துள்ளது. இப்பின்னடைவினால்யாழ், குடாநாட்டை எந்தளவிற்கு அரசு தக்கவைத்திருக்கப்போகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்நிலையில் அரசு உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முன்முயற்சிகளை எடுக்க வேண்டும்,

ஆனையிறவு படைத்தளத்தை விடுதலைப்புலிகள் கைப்பற்றியது இலங்கை இராணுவத்துக்கு மிகப்பெரிய இழப்பாகும். இந்த இழப்பு அரசு மேற்கொண்டுவரும் பேச்சு வார்த்தைக்கு பெரும் பின்னடைவையும் ஏற்படுத்திக் கொடுக்கும்,

நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு முன் யாழ்ப்பாணத்தை முற்றிலுமாகவிடுதலைப் புலிகள் கைப்பற்றிவிடுவார்கள்.

எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளுச்கு மூன்று வாரகால

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட படை அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன

(கொழும்பு)

ஆனையிறவு படைத்தள மோதலில் பலியான படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனையிறவு படைத்தளத்தின் கட்டளைத் தளபதியான (54 - வது படையணி) போஸிபெர்னாண்டோ மேஜர் ஜெனரலாகவும் சேணல் நீல் அகபீன, கேணல் பாத்தி ஜெயதிலக ஆகியோர் பிரிகேடியராகவும் ஹேவ ஆராச்சி கேணலாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## தீ விபத்தில் எரிந்து நாசம்

(கொழும்பு)

கொழும்பு பிரதான வீதியில் உள்ள கடைத்தொகுதியில் மூன்றாவது மாடியில் பொலித்தீன் விற்பனை நிலையம் தீயினால் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளது

பிரதான கட்டடத்தின் மூன்றாவது மாடியில் உள்ள

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பின்வாங்கும் உத்தரவு வந்ததும் படையினர் முண்டியடித்துஓடினர்

### காயமடைந்த படைவீரர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தாக்குதலினால் எமது தொலைத் தொடர்புக் கோபுரம் சேதத்திற்குள்ளானதைத் தொடர்ந்து எம்மை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு வந்தது. இதனைத் தொடர்ந்து நாம் அங்கிருந்து பின்வாங்கி ஓடினோம்

இவ்வாறு ஆனையிறவுத் தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்து கொழும்பில் இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கோப்ரல் ஆர்.கே.டபிள்யூ உபாலி தெரிவித்துள்ளதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்துள்ளது.

( 6ஆம் பக்கம் பார்க்க)

## ○ ஆனையிறவில் கடமை புரிந்த படையினரின் பெற்றோர் உறவினர் கொழும்பு நோக்கிப்படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு மற்றும் இயக்கச்சிப் படைத்தளத்தில் கடமையிலிருந்த படையினர்களின் உறவினர்களும் பெற்றோர்களும் கொழும்புக்குப்படையெடுத்து வருவதாககொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்புக்குப் படையெடுத்துவரும் பெற்றோர்கள், உறவினர்கள் தங்குவதற்குப் பல்வேறு அமைப்புகள் உதவி வருகின்றன. இலங்கைப் பௌத்த காங்கிரஸ் பௌத்த லோக மாவத்தையில் உள்ள பௌத்த காங்கிரஸ் கட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## செல்வா சமாதியில் மலரஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் தந்தை செல்வாவின் 23 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரின் சமாதியில் இன்று காலை 9மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களாலும் பொது மக்களாலும் மலரஞ்சலி தூவி நினைவுகூரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச)

## ★ வன்னியில் வந்து சந்திக்குமாறு புலிகள் விடுத்த அழைப்பை நோர்வே ஒப்புக்கொண்டது

(கொழும்பு)

நோர்வே குழுவினரை வன்னிக்கு வந்து தம்மைச் சந்திக்கும்படி விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்ததை இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஜோன் பெஸ்பேக் உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் விடுதலைப்புலிகளுடனான சந்திப்பு இடம்பெறும் என்று கூறிய ஜோன்பெஸ்பேக் யார் யார் செல்வார்களென்று கூறமறுத்ததுடன் (6ம் பக்கம் பார்க்க)

## ★ ஆனையிறவில் கொல்லப்பட்ட 126 இராணுவத்தினரின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் ஒப்படைப்பு

(கொழும்பு)

ஆனையிறவு மோதல்களின் போதுகொல்லப்பட்ட நூற்று இருபத்தாறு இராணுவத்தினரின் சடலங்களை நேற்று விடுதலைப்புலிகள் கிளிநொச்சியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஹர்ஷா குண

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவை அண்டிய பகுதிகளில் தொடர்ந்து விமானத் தாக்குதல்

(கொழும்பு)

ஆனையிறவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இலங்கை விமானப் படையினர் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருவதாக சிரேஷ்ட விமானப்படை அதிகாரி ஒருவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம் பெற்றுச்செல்ல இருந்த அதிகாரியும் தாக்குதலில் பலி

(கொழும்பு)

ஆனையிறவுப் பகுதியில் நிலை கொண்டிருந்த 54-வது படைப்பிரிவின் ஒரு பகுதிக்கு கட்டளை இடும் அதிகாரியாக இருந்த லெப்டினன்ட்கேணல் சோமராச்சியின் சடலம் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் மூத்த இராணுவ அதிகாரி

(6ஆம் பக்கம் பார்க்க )

## இராணுவ வாகனம் மோதியதில் சைக்கிளில் சென்றவர் பலி

பலாலி வீதி உரும்பிராய் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் இராணுவ வாகனம் மோதியதில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற இவ்

[6ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் புதைகுழி சந்தேக நபர்கள் நேற்றும் நீதிமன்றில் ஆஜராகவில்லை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுவெலிக்கடைச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து படையினரும் நேற்றும் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

கொழும்பு பொலிஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**தமிழகத்தில்,**

# தமிழ் வழிக் கல்வி ரத்து தீர்ப்புக்கு எதிராக தமிழர்கள் ஒன்றிணைவு

[தமிழ்நாடு]

தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவான தமிழக அரசின் ஆணையை ரத்துச் செய்த சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானகண்டனக் குரல்கள் தமிழகமெங்கும் ஓங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் இந்த நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக அனைத்து தமிழ் அமைப்புக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் கைகோர்த்து களத்தில் நிற்க வேண்டும் என தி. மு. க. பிரமுகரும் இலக்கியவாதியுமான எழுத்தாளர் வலம்புரி ஜான் அறைகூவல் விடுத்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் குமரிஆனந்தன் இத்தீர்ப்புக் குறித்த தனது அதிருப்தியை தமிழ்ப் பற்றுள்ள இதயங்கள் மனமுடைந்து போகக்கூடிய தீர்ப்பொன்று தமிழுக்கு கிடைத்துள்ளதென வெளிப்படுத்தியுள்ளார்.

இதனை விட மேற்படி தீர்ப்பின் எதிர் விளைவுகள் மௌனப் போராட்டங்களாகவும், ஆர்ப்பாட்டங்களாகவும் தீர்ப்பு நகல் எரிப்பு எனவும் தமிழகம் எங்கும் பரவி வருவது தடுக்க இயலாத நடவடிக்கைகளாகத் தொடர்கின்றன. (உ)

## ரஷ்ய 310ரக போர்ப் பீரங்கிகள் வாங்குவதில் இந்தியா விருப்பம்

[புதுடில்லி]

ரஷ்யாவில் 310 ரகபோர்ப் பீரங்கிகளை இந்தியா வாங்குவதற்கு முன்வந்துள்ளது இதனை சீன அரசு ஆமோதித்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் இது விடயமாகப் பேச்சுக்கள் நடத்த ரஷ்யா செல்லவுள்ளார்.

இந்திய அமைச்சர் அங்கு பீரங்கிகள் வாங்குவதற்கான விலை விடயமாகப் பேசவுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

இந்த ரக ரஷ்ய பீரங்கிகள் கிட்டத்தட்ட 25 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியானதென்று சொல்லப்படுகிறது. (து)

## பீஹார் மாநில சட்ட சபையில் அமளி, துமளி லாலுப்பிரசாத் வருத்தம்

(பிஹார்)

தெற்கு பிஹாரில் 18 மாவட்டங்களை உள்ளடக்கிய தனி பிராந்தன் மாநிலத்தை உருவாக்குவதற்கான பிஹார் சீரமைப்பு மசோதாவை சபையில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது பெரும் அமளி துமளி ஏற்பட்டது வன்முறைகளும் ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அவைத்தலைவர் கட்சிகளுக்கு அமைதிபேணும்படி கேட்டுக்கொண்டார்.

அன்றைய கூட்டத்தில் நீதிமன்ற அனுமதியுடன் கலந்து கொண்ட லாலுப்பிரசாத் யாதவ் சபையில் நடந்தவற்றிற் கொல்லாம் வருத்தம் தெரிவித்துக் கொண்டார். எனினும் எதிர்க்கட்சி உறுப்பினர் அனைவரும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதனை அடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

### பிரான்ஸின் இராணுவ உதவி இந்தியாவிற்கு

பிரான்ஸ் இந்தியாவிற்கு புழக்கத்திலுள்ள ஆயுதங்களை விற்பதற்கு முன்வந்துள்ளது.

இந்தியாவிற்கு இராணுவம் மற்றும் போர் முக்கியத்துவம் வாய்ந்த உதவிகளைத் தருவதற்கு பிரான்ஸ் முன்வந்திருப்பதாக புதுடில்லிக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பிரான்ஸ் இராணுவத் தளபதி தெரிவித்தார் என்று சொல்லப்படுகிறது. (து)

## ஜப்பானில் செயற்பட்ட அணுவுலையில் கோளாறு எனினும் பாதிப்பில்லை

(டோக்கியோ)

ஜப்பானில் ஒபரோ என்ற இடத்தில் செயற்பட்டு வந்த அணுஉலையில் கோளாறு ஏற்பட்டுள்ளது. எனினும் இதனால் இதுவரை பாதகமான விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை எனத்தெரிய வருகிறது.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இருந்து 950கிலோ மீற்றர் தொலைவில் அமைக்கப்பட்டிருந்த இவ் அணுவுலையில் மின் உற்பத்தி நடைபெறாது எரிபொருள் பற்றிய ஆராய்ச்சிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும்,

அணு எரிபொருள் உற்பத்தியை ''50கிலோ வோல்ட்'' இல் இருந்து ''3.5 மெகா வோல்ட்'' ஆக அதிகரிக்க முயன்றபோது இக்கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும்தெரிய வருகிறது. [உ]

## இந்திய அவுஸ்திரேலிய உறவுகள் மீண்டும் வர்த்தகத்தால் வளரும்

(சிட்னி)

1998 இல் இந்தியா அணு ஆயுத சோதனையை நடத்தியதால் உறவு முறிந்திருந்த இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் மீண்டும் ஒப்பந்தங்கள் செய்ய முன்வந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்தியாவின் தகவல் தொலை தொடர்பு தொழில் நுட்பம் அவுஸ்திரேலியாவைக் கவர்ந்திருப்பதாகவும் அதேவேளை இந்தியாவிற்கு வ யுப் பொருட்களை அவுஸ்திரேலியா அனுப்ப முன்வந்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

விரைவில் இரு நாடுகளுக்கிடையேயும் அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் தொடருமென்று அவதானிகள் கருதுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## வருடத்தில் ஒருவாரம் யுத்த நிறுத்தம் வேண்டும் ஒலாரா ஒட்டுணி

(ஜெனிவா)

சிறுவர் நலன்கருதி உலகளாவிய ரீதியில் ஒரு வாரம் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒலாரா ஒட்டுணி ஆலோசனை கூறினார்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளும் குழுக்களும் வருடத்தில் ஒருவாரம் யுத்த நிறுத்தத்தை மேற் கொள்ள வேண்டும். இந்த யுத்த நிறுத்தத்தை சகலரும் ஒரேகாலத்தில் மேற் கொள்ள வேண்டும் இதை மேற்கொள்வதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை செயலாளர்கொபி அனானின் பிரதி நிதியான ஒலாரா ஒட்டுணி தெரிவித்திருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# சாகாவரம் பெற்ற ராமாயணத்தைப் படைத்த இலக்கியப் புதையல்

### கம்பனுக்கு இந்தியத் தூதுவர் புகழாரம்

(கொழும்பு)

''கம்பன் ஒரு இலக்கியப் புதையல். இராமாயணம் உலக இலக்கியம்'' என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சிவசங்கர் மேனன் கூறினார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன்மண்டபத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற கம்பன்விழாவில் தொடக்கவுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

விழா ஆரம்பமாகுமுன்னர் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் உருவப்படத்தைத் தாங்கிய ஊர்வலம் பிரதான வீதியிலிருந்து ஆரம்பமாகி மண்டபத்தை வந்தடைந்தது.

தூதுவர் அங்கு பேசுகையில் கூறியதாவது, 'கம்பன் ஒரு இலக்கியப் புதையல் சாகாவரம்பெற்ற கம்பராமாயணம் என்ற இலக்கியத்தை அவர் படைத்துள்ளார், கம்பராமாயணம் உலகளாவிய ரீதியில் பெயர் பெற்ற இலக்கியமாகும் எமது கலை, கலாசாரத்திற்குக் கிடைத்திருக்கும் தனித்துவமான அம்சம்தான் ராமாயணம், புராணங்கள், வேதங்கள் என்பனவாகும்' என்றார்.

துணைவேந்தர் மூக்கையா

கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மா. மூக்கையா தலைமையுரை நிகழ்த்துகையில் 'ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையைப்போன்று நாட்டின் நெருக்கடியான சூழலில் இத்தகைய ஒரு விழா அவசியம் தானா என்று கேட்கத்தோன்றும்.

கலை, கலாசாரத்தை ஒதுக்கிவிட்டு நம்மால் வாழ முடியாது. நமது கலை, கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. ஆதலால் இத்தகைய விழாக்கள் நடைபெற வேண்டியது அவசியமே' என்றார். (சி)

## நயினை ஆலய உற்சவ ஒழுங்குகள் செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் உற்சவ ஒழுங்குகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நயினாதீவுக்கான மோட்டார் படகு சேவை, பஸ்போக்குவரத்து மக்களுக்கான சுகாதார சேவைகள், வீதிகள் புனரமைப்பு சம்பந்தமான விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் யாழ். பிரதேச செயலர், வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்து சபை பொது முகாமையாளர் திரு. வி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (சி-3)

## பொருளாதாரத் தடையை கண்டித்து மல்லாவியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் தொடரும் அரசின் பொருளாதாரத் தடைகளைக் கண்டித்து நேற்று முன்தினம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவுடன் மல்லாவிப் பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்த இவ் ஊர்வலமானது மல்லாவி ஐ. சி. ஆர். சி. அலுவலகம் வரை இடம்பெற்றதாகவும் மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதாகவும் தெரிய வருகிறது. (உ-சி)

## தகரக் கொட்டகைகள் நேற்று பரீட்சித்துப்பார்க்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பளை மற்றும் யுத்தப் பகுதியில் இருந்து வெளியேறியுள்ள மக்களுக்கு வழங்கவுள்ள தற்காலிகத் தகரக் கொட்டகைகள் நேற்றைய முன்தினம் யாழ். செயலகத்தில் வடிவமைத்துப் பார்க்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் மேற்படி அமைப்பினை பார்வையிட்டார்.

யு.என்.எச்.சி.ஆர். மற்றும் ஜி.ரி.சற் ஆகிய தொண்டர் அமைப்புகள் இக்கொட்டகைக்கான பொருட்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-3)

## சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு தங்கம் கடத்தும் முயற்சி முறியடிப்பு

சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகத் தங்கம் கடத்தப்படவிருந்த முயற்சி நேற்று முறியடிக்கப்பட்டிருப்பதாக கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

11 கிலோ 600 கிராம்எடை கொண்ட 75 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய சிங்கப்பூர் தங்கத்தினைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நபரை விமான நிலைய சுங்கப்பிரிவினர் கைதுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

கொழும்பைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரே இச் சட்ட விரோதக் கடத்தல் முயற்சியின் சூத்திரதாரி எனத்தெரியவந்துள்ளது. (உ)


## அழகியல் பயிற்சிகள்

### விரைவில் ஆரம்பம்

- ★ துணிவகை, சேலைகள் வர்ணம் தீட்டல் பயிற்சி
- ★ நவீன மலர் அலங்கார வேலைகள்
- ★ கைப்பணிப் பொருட்கள் தயாரித்தல்
- ★ கேக் ஐஸ்சிங்
- ★ ஆடை நவீன மோஸ்தர்களில் தயாரித்தல்

தனித்தனி பயிற்சிகளை தெரிவு செய்து பயில விரும்பும் மாணவிகள் 01-05-2000 விண்ணப்பிக்கவும்

மகளிர் அபிவிருத்தி நிலையம்
19, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

[342]

யாழ்ப்பாணம்

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல. 15

ஆக்கம் : வை. சசிகுமார்

★ இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

(01) மனிதர்களுக்கு மட்டும் உள்ள இயல்பு எது?
1. அழுகை 2. சிரிப்பு 3. கோபம்

(02) பரீட்சையில் சித்திபெறத் தவறிய தீபனுக்கு அவனது ஆசிரியர் கூறுவது.
1. உனக்குப்படிப்புச் சரிவராது என்று
2. இன்னும் முயற்சி செய்துபடி முன்னேறலாம் என்று
3. நீ ஒன்றுக்கும் உதவ மாட்டாய் என்று

(03) வெறிநாய் ஒன்று உம்மைக் கடித்தவிடத்து ஏற்படும் நீர் வெறுப்பு நோயைத் தடுப்பதற்கும் பின்வருவன வற்றுள் எதற்கு அதிக கவனம் செலுத்தவேண்டும்.
1. அலைந்து திரியும் நாய்களை அழித்தல்
2. காயத்தை நீரினால் கழுவுதல்
3. கூடிய விரைவில் தடுப்பு மருந்து ஏற்றுவித்துக் கொள்ளல்

(04) குமரன் தனக்குக் கீழ்ப்பணியாத சகபாடிகளை அடித்துத் துன்புறுத்தி வருபவன் ஆவான் எனவே.
1. குமரன் ஒரு புத்திசாலி
2. குமரன் ஒரு பைத்தியக்காரன்
3. குமரன் முரட்டுச் சுபாவம் உடையவன்

(05) வாய்மொழியாகப் பரப்பப்படும் உறுதிப்படுத்தப் படாத செய்தி எவ்வாறு அழைக்கப்படும்?
1. வதந்தி 2. சிறுகதை 3. கடிதம்

★ கமல், விமல், அமல், நிமல், ஆகியோரின் உயரங்கள் பற்றிய பின்வரும் தரவினைக்கொண்டு வினாக்களிற்கு விடைதருக.

கமல் அமலிலும் உயரம் குறைந்தவன் எனினும் விமலிலும் பார்க்க உயரம் கூடியவன் நிமல் கமலிலும் உயரம் குறைந்தவன் எனினும் விமலிலும் பார்க்க உயரம் கூடியவன் ஆவான்.

(06) இவர்களில் உயரம் கூடியவர் யார்?

(07) இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?

(08) உயரங்களின் அடிப்படையில் இவர்களின் பெயர்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

★ எமது நாட்டைச் சேர்ந்த ஒரு பாடசாலை மாணவன் கனடா நாட்டில் வாழும் பேனா நண்பனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் காணப்பட்ட சில வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- எமது நாடு ஒரு தீவு
B- எமது அரசாங்கத்தின் தலைவர் ஜனாதிபதியாவார்
C- இங்கு காணப்படும் மலைகளில் மிகவும் பெரியது நமுனுகுல மலையாகும்.
D- இங்கு காணப்படும் நதிகளில் மிக நீளமானது மகாவலி நதியாகும்
E- எமது நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள், தைத்த ஆடைகள் என்பனவாகும்,

(09) மேலே தரப்பட்ட வாக்கியங்களில் சரியானவை.
1. A,B,C,D 2. A,B,C,E 3. A,B D E

(10) கயல்விழியிடம் 50 மாபிள்களும் சிந்துவிடம் அதைவிட 22 மாபிள்கள் கூடுதலாகவும் இருக்கின்றன இவர்கள் இருவரிடமும் உள்ள மாபிள்களைவிட பல்லவியிடம் 8 மாபிள்கள் குறைவாக உள்ளன. பல்லவியிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?

★ தந்தை ஒருவர் குறித்த தொகைப்பணத்தை தமது பிள்ளைகளான மைதிலி, மைவிழி தென்றல், தேன்மொழி ஆகியோருக்கு முறையே பணத்தொகையின் 1/2, 1/4, 3/8, 3/4 பங்குகள் வீதம் பகிர்ந்தளித்தார் எனின்.

(11) இவர்களில் அதிகளவு பணத்தைப் பெறுபவர் யார்?

(12) இவர்களில் குறைந்தளவு பணத்தைப் பெறுபவர் யார்?

(13) 2000.01.22 ஆம் திகதி தொடக்கம் 2000.03.02 ஆம் திகதிவரையுள்ள நாட்களின் எண்ணிக்கையைக் காண்க?

(4 ஆம் பக்கம் பார்க்க)

குறிப்பு:-

இதற்கான விடைகளை 01-05-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### கல்விப்பகுதி வினா இல. 15

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்:..............................................

சொந்த முகவரி: ..............................................

கற்கும் பாடசாலை: ..............................................

மாணவர் கையொப்பம்: ..............................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## தரம் ஐந்து புலமைப் பரீட்சை வினா இல. 14

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) இ. மீநிலா. சென்.ஜோன் பொஸ்கோ.
(02) கு. அனித்தியா, யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.
(03) ம. ஜெயதீபன், மூளாய்சைவப்பிரகாச வித்தியாலயம்.
(04) உ. தனுஜா, இருபாலை சீ.சீ தமிழ்க்கலவன் பாடசாலை.
(05) இ. அர்ச்சயா, சாவ. அ.மி.த.க. பாடசாலை.
(06) இ. சாஜிபானு, கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்.
(07) நீ. திவாகரன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(08 சி. டினேசன், உடுவில் மகளிர் கல்லூரி.
(09) த. தக்சனா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(01) சி. ஜெகன், யாழ். செட்டித்தெரு பாடசாலை.
(11) க. ஜானகி, நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.
(12) சு. ரதீபா, ஏழாலை புனித இசிதோர் றோ.க.த. பாடசாலை.
(13) பெ. யூட்தேவதர்சன், சென். ஜோண் பொஸ்கோ.
(14) நா. ஆஷாயினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(15) நா. தஷாயினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(16) க. ராம், தேவரையாளி இந்துக் கல்லூரி.
(17) ப. லக்ஷிகா, யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.
(18) ச. ஞானசேந்தன், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(19) ந. சுஜீவன், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
(20) சு. தர்ஷனா, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை.
(21) ஜெ. கேசவன், தேவரையாளி இந்துக் கல்லூரி,
(22) லோ. தர்சினி, சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலை.
(23) வி. கௌசிதா, வட்டு. இந்து ஆரம்பப் பாடசாலை.
(24) ந. சுதர்சனன், சண்டிலிப்பாய் இந்க் கல்லூரி.
(25) ஜெ. சகன்யா, கைதடி கலைவாணி வித்தியாலயம்.
(26) சி. சம்பூரணி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
(27) சி. கிரிஷானி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
(28) கு. நிறோஜன், கைதடி கலைவாணி வித்தியாலயம்.
(29) தி. துஷியந்தன், சென். ஜோண் பொஸ்கோ.
(30) கு. பகீரதன், யா. தி. இ. த. க. பாடசாலை.
(31) யோ. தர்ஷிக்கா, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(32) கு. வியேந்தினி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.
(33) ஆ. வானுஜி, வேலணை நடராசா வித்தியாசாலை.
(34) ம. ஞானகரன், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(35) த. தமிழினி, வட இந்துமகளிர் கல்லூரி.
(36) சி. நிசாந்தினி, வட இந்து மகளிர் கல்லூரி.
(37) த. விதுர்ஷா, சாவ. சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
(38) ஜே. மேரிறதனி, யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.
(39) த. நித்தியா, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
(40) ச. காண்டீபன், யாழ். மத்திய கல்லூரி.
(41) நா. வினோகினி, பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலை.
(42) தி. வினோதா, நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.
(43) ஸ்ரீ. நிஷாந், தேவரையாளி இந்துக் கல்லூரி.
(44) இ. மதுரன், வேலணை நடராசா வித்தியாசாலை.
(45) சூ. சூரியதாட்ஷாயனி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.
(46) தே. ஷியாம்குமார், இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
(47) து. றாம்ஜீத், சாவ. மகளிர் கல்லூரி.
(48) இ. தர்ஷிகா, சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(49) கோ. பொதிகைச்செல்வன், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
(50) இ. தணிகைவாசன், சென். ஜோண் பொஸ்கோ.
(51) பா. கபில்ரன் காஞ்சனா, உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
(52) சி. சிவறஞ்சினி. யாழ். தா.இ.த.க. பாடசாலை.
(53) ம. பிரகாந்தன், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்.
(54) ந. மினுஷா, அச்சுவேலி மகாவித்தியாலயம்.
(55) பு. இரோஷன், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
(56) ச. கஜநீதன், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
(57) சி. ஆனந், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(58) ச. தஸீந்தன், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(59) சி. விஷ்ணுகா, தேவரையாளி இந்துக் கல்லூரி.
(60) த. அங்குசன், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(61) பொ. முருகேந்திரா, சென். ஜோண் பொஸ்கோ.
(62) சி. கிருபாளினி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
(63) நா. அனோஜினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(64) த. கஸ்தூரி, சுண்டுக்குளி மகளிர்க் கல்லூரி.
(65) க. டிலான், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(66) ச. யோகாம்பிகை, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
(67) கி. துவாரகா, யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.
(68) ந. கம்சினி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
(69) த. மதிவதன், யாழ். மத்திய கல்லூரி.
(70) க. தனுப்பிரியா, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
(71) கெ. றொணிகியூபேட், இராமநாதன் கல்லூரி.
(72) போ. றொசாறியோ நிசாலினி.
(73) ஜெ. திவாதரன், சென். ஜோண் பொஸ்கோ.
(74) வி. சிந்துஜன், புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி.
(75) அ. அகஸ்ரின் அன்ரனிராஜ், புனிதபத்திரிசியார் கல்லூரி.
(76) யோ. யூட், றோ.க.த.க. பாடசாலை.
(77) அ. அகஸ்ரின் அருள்ராஜ், புனித பத்திரிசியார் கல்லூரி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திறப்பு விழா

(தென்மராட்சி)

கல்வியங்காடு ஸ்ரீசத்திய சாயி பஜனை நிலையத்தின் நிரந்தர மண்டபத் திறப்பு விழாஎதிர்வரும் 30ஆம்திகதி நிலையத் தலைவர் ஸ்ரீ.வ. பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பகவான் ஸ்ரீசத்தியசாயி நிலையங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ செ.சிவஞானம். தேசிய மனித மேம்பாட்டுக் கல்வி ஆலோசகர் (தமிழ்)பேராசிரியர்.செ.சிவஞானசுந்தரம் (நந்தி) ஸ்ரீ.வி.பி.பாலசிங்கம் உட்பட பல பிரமுகர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

[சி-77]

## ரூ. 5 இலட்சம் கஞ்சாச்செடி தீயில் அழிப்பு

(கொழும்பு)

புத்தளை வந்தம் பகுதியிலுள்ள காட்டில் ஒரு ஏக்கரில் செழித்து வளர்ந்திருந்த 4 ஆயிரம் கஞ்சாச் செடிகளையும் 2000 கிலோ உலர்ந்த கஞ்சாவையும் கைப்பற்றிய பொலிஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

5 இலட்சம் ரூபா பெறுமதியான இச்செடிகளையும் கஞ்சாவையும் பொலிசார் தீயிட்டு அழித்தனர். (சி)

## குடும்ப அட்டை புதுப்பிப்பு

(கல்வியங்காடு)

நல்லூர் ஜே/109 கிராம சேவகர் பிரிவில் குடும்பப் பதிவு அட்டை புதுப்பிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகரிடம் இதற்கான படிவங்களைப் பெறலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (சி-54)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற தேசிய கணனிச் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 25-ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அனைத்து மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க விண்ணப்ப முடிவுத் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (சு)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த எழுந்தருளி உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை அபிடேக ஆதாரணைகளைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருவார். (செ)

## தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைசுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிபோடும் பணியில்.

இன்றுபுதன்கிழமை காலை 8.30மணிதொடக்கம் 12.30 மணிவரை பாண்டியன் தாழ்வு சந்தனமாதா தேவாலயத்திலும்,

பி.ப 2 00மணிதொடக்கம் 4.30மணிவரை கொண்டலடி சனசமூக நிலையத்திலும்,

நாளை வியாழக்கிழமை காலை 8.30மணிதொடக்கம் 12.50மணிவரை குருநகர் சனசமூக நிலையத்திலும்,

பி.ப2 00மணி தொடக்கம் 4.50மணிவரை சுண்டுக்குளி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

(செ)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல. 15

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அடுத்துவரும் எண்களைக் குறிப்பிடுக.

(14) 12, 15, 19, —, —
(15) 243, 81, 27, —, —
(16) 510, 493, 476, —, —
(17) 150 கிராம் நிறையுடைய 30 இனிப்புப் பொதிகளையும், 100 கிராம் நிறையுடைய 15 இனிப்புப் பொதிகளையும் வாங்கி ஒன்று சேர்த்த பின்னர் இனிப்புப் பொதிகளின் மொத்த நிறையாது?

★ கீழே உள்ள விபரங்களை வாசித்து இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியானதா, பிழையானதா இல்லாவிட்டால் கூறமுடியாதா என்னும் முடிவைத் தீர்மானித்து அதன் கீழ்க்கோடிடுக.

வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குச். சென்ற அருந்தவம் 500 கிராம் சீனிதரும்படி கேட்டான் கடையில் உள்ள தராசில் அவன் காணும்படி சீனி நிறுக்கப்பட்டு பொட்டலமாக்கப்பட்டு அவனுக்குக் கொடுக்கப்பட்டது அவன் சீனி சிதறவிடாதபடி பொட்டலத்தை வீட்டிற்கு கொண்டுவந்தான். இக்கடைக்காரர் நிறுவையில் களவு செய்வதாக ஊரிலுள்ளோர் எண்ணுகின்றனர். இதன் உண்மையை அறிய விரும்பும் அருந்தவம் சீனிப்பொட்டலத்தை வீட்டில் உள்ள புதிய தராசு ஒன்றினால் இரண்டுதடவைகள் திருத்தமாக நிறுத்துப் பார்த்தான் அப்பொழுது பொட்டலத்தின் நிறை 450 கிராம் மாத்திரமே என அவனுக்குத் தெரிந்தது.

(18) கடையில் உள்ள தராசில் வழு உள்ளது (சரி/பிழை/கூறமுடியாது)
(19) அருந்தவம் நிறுத்த தராசு புதியது எனவே சீனியின் நிறை 450 கிராம் ஆகும் (சரி/பிழை/கூறமுடியாது)
(20) ஊராரின் எண்ணம் உண்மை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது (சரி/பிழை/கூறமுடியாது)

★ A,B,C,D ஆகிய நகரங்கள் அமைந்திருக்கும் விதம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

● A,C நகரங்கள் இரண்டிற்கும் சரிநடுவே D நகரம் அமைந்துள்ளது.
● B நகரம் C,D நகரங்களுக்கு சரிநடுவே அமைந்துள்ளது.
● B.D நகரங்களுக்கிடையிலான தூரம் 12 கிலோ மீற்றர் ஆகும்.

(21) D நகரத்திற்கு அருகில் இருக்கும் நகரம் எது?
(22) B நகரத்திற்கு மிகத் தூரத்தில் இருக்கும் நகரம் எது?
(23) A C நகரங்களுக்கிடையிலான தூரம் எவ்வளவு?
(24) A D நகரங்களுக்கிடையிலான தூரம் எவ்வளவு?

★ பின்வரும் தரவினைக் கருத்திற் கொண்டு கீழ்த் தரப்படும் வினாக்களுக்கு விடைதருக.

அஜித் என்பவரின் இளைய சகோதரி சாளினி, நிக்சன் சாளினியின் தம்பி ஆவார். யூட் என்ற மகனையுடைய மதுரா அஜித்தின் அக்கா ஆவார். திலீப் யூட்டின் சித்தப்பா ஆவார்.

(25) சாளினிக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?
(26) யூட்டிற்கு எத்தனை மாமாமார் உண்டு?
(27) யூட்டிற்கும் சாளினிக்கும் இடையில் உள்ள உறவுமுறை யாது?

★ பெட்டி ஒன்றில் ஒரே அளவான 10 மாபிள்கள் இருக்கின்றன. அவற்றில் 8 மாபிள்கள் சிவப்பு நிறமானவை 2 மாபிள்கள் நீலநிறமானவை பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றின்போதும் பெட்டியில் இருந்து எடுக்கப்படும் மாபிள்கள் மீண்டும் பெட்டியில் இடப்படுகின்றன நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சரியாயின் R எனவும் பிழையாயின் W எனவும் கூறமுடியாது எனின் X எனவும் அடையாளமிடுக.

நிகழ்வுகள்

(28) கண்கள் மூடிய நிலையில் பெட்டியில் இருந்து மாபிள் ஒன்று எடுக்கப்பட்டு பின்னர் அதன் நிறத்தை அவதானித்தால் அதன் நிறம் சிவப்பாக மட்டும் இருக்கும் (        )
(29) கண்கள் மூடிய நிலையில் பெட்டியில் இருந்து மாபிள்கள் 5 எடுக்கப்பட்டு பின்னர் அவற்றின் நிறத்தை அவதானித்தால் ஆகக் குறைந்தது 3 மாபிள்கள் சிவப்பு நிறமாக இருக்கும் (        )
(30) கண்கள் மூடிய நிலையில் பெட்டியிலிருந்து மாபிள்கள் 2 எடுக்கப்பட்டு அவற்றின் நிறத்தை அவதானித்தால் அவை நீலநிறமாக இருக்கலாம் (        )

# புலமைப் பரீட்சை வினா இல. 14 விடைகள்

(1) புதன் (2) மணல் மண் (3) மலைநாடு
(4) நில அரிப்பு (5) அலங்காரம்
(6) 301 குச்சிகள் (7) 108 ரூபா
(8) 30 மாங்கன்றுகள் (9) 530 ரூபா
(10) 9 கிலோ சீனி (11) இறந்த காலம்
(12) நிகழ் கலாம் (13) எதிர் காலம்
(14) இறந்த காலம் (15) எதிர் காலம்

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (16) | 75 வது ஆண்டு | — | பவளவிழா |
| (17) | வியாழன் | — | கிரகம் |
| (18) | நைதரசன் | — | வளியில் கலந்துள்ளது |
| (19) | பயறு | — | விதைத்தல் |
| (20) | கண்ணாடி | — | மின்சாரத்தைக் கடத்தாது |

(21) 4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,
இப்படிக்கு,
சு. மீனா,
(22) 19.04.2000 (23) சு. மீனா
(24) கூற முடியாது
(25) 4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

# தரம் ஐந்து புலமைப் பரீட்சை வினா இல. 14

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபர 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

(78) வி. ஆதித்தன், புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி.
(79) க. எழில்வேள், சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
(80 க. சிவசொரூபன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(81) வி. கலினா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(82) யோ. ரஜிகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(83) ச. துஷீபன், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
(84) கு. கோபிகா, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(85) ம. மனோஜ், சென். பற்றிக்ஸ் கல்லூரி.
(86) கு. தர்ஷிகா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(87) சி. துவாரகா, மணியகாரன் தோட்டப் பாடசாலை.
(88) அ. சசிகலா, மணியகாரன் தோட்டப் பாடசாலை.
(89) ஜெ. நிலுஜா, கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்.
(90) ந. சர்மினி, கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்.
(91) சி. நிலானி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
(92) நா. காயத்ரி, நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை.
(93) ஆ. கீதாஞ்சன், தேவரையாளி இந்துக் கல்லூரி.
(94) எஸ். ராதாரமணி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
(95) ம. மயூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.
(96) அ. ஜசிந்தன், தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.
(97) செ. உஷாந்தினி, துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை.
(98) வே. நித்தியா, திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.
(99) வி. ஜனனி, திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
(100) மு. சிவசயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
(101) வி. சுமங்கலா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(102) யோ. கம்சன், சென். ஜோன்ஸ் கல்லூரி.
(103) ச. ஷாமளை, யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.
104) சி. கிரிசாந், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.
105) லி. யதுகுலா, யாழ். இந்துமகளிர்ஆரம்பபாடசாலை.
106) க. லக்ஷி, நாவற்குழி அ.த.க. பாடசாலை.
107) ச. கேதாரணி, இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
108) மு. கஜனி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
109) ந. நிருஷன்ராஜ், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.
110) த. பிரசன்யா, இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
111) சி. லக்சாயினி, இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
112) ச. சித்திரா. நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
113) ச. கோவர்த்தன், யாழ். மத்திய கல்லூரி.
114) ந. நிரோஷிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
115) ஆ. பிரியதர்ஷினி, காரைநகர் தியாகராசா ம. ம. வித்தியாலயம்.
116) ச. அமரஜீனு, நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
117) பா. டிலக்ஷனா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
118) ஆ ஜெனனி, சாவ. டிறிபேர்க் கல்லூரி.
119) பா. நிருஜா, சாவ. டிறிபேர்க் கல்லூரி.
120) அ. திவ்விகா, மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
121) த. நிவர்ஷன், மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
122) த. சர்மிலன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
123) க. தனஞ்சயன், நெல்லியடி சுப்பிரமணிய வித்தியாலயம்.
124) வே. அர்ஷனா, யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.
125) தி. கஜவரன், சென் பற்றிக்ஸ் கல்லூரி.
126) கி. ஜெனி, யாழ். கன்னியர்மடம்மகாவித்தியாலயம்.
127) ச. யாழினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
128) க. லோஜனா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
129) சி. ஜெசிகீசன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
130) க. கல்சியா, கைதடி கலைவாணி வித்தியாலயம்.
131) சி. கார்த்தீபன், ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்.
132) தே. சம்யுக்தா, சுன்னாகம்நாகேஸ்வரி வித்தியாலயம்.
133) ந. கீர்த்தனா, மயிலணி சைவமகா வித்தியாலயம்.
134) செ. அஷான், உடுவில் மகளிர் கல்லூரி.
135) ம. லிலானி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.
136) கோ. மேனகா, சாவ. இந்து ஆரம்ப பாடசாலை.
137) த. சோபியா, மணியகாரன் தோட்ட பாடசாலை.
138) சி. அனுசலா, உயரப்புலம் குணபாலன்வித்தியாலயம்
139) க. சரவணன், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்.
140) கோ. கிருஷாந்தி, இணுவில் மத்திய கல்லூரி.
141) பா. கோபிசங்கர், உடுவில் மான்ஸ்மகாவித்தியாலயம்
142) ர. கௌதமி, இராமநாதன் கல்லூரி.
143) பா. பர்மிலா, ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்.
144) கோ. ருசந்தா, நாவற்குழி மகா வித்தியாலயம்.
145) ஆ. சந்தியா, கைதடி கலைவாணி வித்தியாலயம்.
146) வ. அனுசன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
147) இ. தரங்கினி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
148) பி.கிஷோர்ராஜ், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
149) செ. சயந்தன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
150) பா. நிரோஜன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
151) நீ. தயாபரன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
152) க. லஜிந்தன், யாழ். மத்திய கல்லூரி.
153) கு. வரிங்கரன், சென். பற்றிக்ஸ் கல்லூரி.
154) சி. சாருஜன், நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
155) ஆ. கார்த்தீபன், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.
156) செ. பார்கவி, மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலய .
157) ஆ. ஜீவகன், சாவ. டிறிபேர்க் கல்லூரி.
158) க. நிரோஷன், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
159) ஐ. சுபாகர், தி.இ.த.க. பாடசாலை.
160) ம. விஜரட்ணம், தேவரையாளி இந்துக் கல்லூரி.
161) றொ. பபிதா, அரியாலை ஸ்ரீபார்வதிவித்தியாசாலை.
162) செ. சர்மிலன், ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்.
163) இ. கஜீபன், கைதடி கலைவாணி வித்தியாலயம்.

[நாளை தொடரும்]

## சைவசமய அறிவுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றத்தினரால் மாணவர்களுக்கான சைவ சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என முப்பிரிவுகளாகநடைபெறும்.

போட்டிகளில் சகல பாடசாலை மாணவர்களும் சேரலாம் என்றும் போட்டிகளில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 5-ம்திகதி வியாழக்கிழமைக்கு முன் விண்ணப்பங்களைப் பரீட்சைக் காரியதரிசி திரு. கா. கணேசதாசன் இந்து இளைஞர் மன்றம், விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்குமாறும் வேண்டப்படுகின்றனர். (சி)

## யாழ். மன்றுக்கு 20 வழக்குகள்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு அநுராதபுர நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 20 வழக்குகள் யாழ்ப்பாண நீதிமன்றிற்கு சட்டமா அதிபரினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

[சு]

## தொடர்பு கொள்ள கோரிக்கை

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

ச. சண்முகம் 4 ஐயனார் கோவில் வீதி நாவற்குழி, க. கணேசமூர்த்தி சோபிகா கல்வி நிலையம் டச்சு வீதி சாவகச்சேரி, குணரத்தினம் செல்லம்மா பருத்தித்துறை க. சிறீகாந்தன் மே/பா. கந்தையா சின்னத்துரை தம்பகாமம். (சி-8)

## ஐவர் நியமனம்

[மந்துவில்]

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி உத்தியோகத்தர்களாக வடபகுதியைச் சேர்ந்த ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது தங்களுக்கென சேவை முன்பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

சி. சிறீதரன், ரு. புவனேந்திரா, செல்வி ராகினி. செல்வி உமேஷ், செல்வி அருள்நிதி ஆகியோரே பிரஸ்தாப ஐவருமாவார்.

[சி-39]

## இன்று

(ஆவரங்கால்)

வலி. கிழக்குப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி, ப. 2.00 மணிக்கு பிரதேச சபை உப காரியாலய மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி தலைமையில் நடைபெறவுள்ளது என வலி. கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கச் செயலாளர் செல்வி எஸ். ராகினிதேவி தெரிவித்துள்ளார். (57-சி)

## சைக்கிள் திருட்டு

(சங்கானை)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஒருவர் சைக்கிளைவிட்டு புடவைக் கடைக்குச் சென்று திரும்பி வந்து பார்த்த வேளையில் சைக்கிளைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது..

வைத்தியசாலையில் பணிபுரியும் றேபேட் ஸ்ரீபன் என்பவருடைய லுமாலா சைக்கிளே திருடப்பட்டுள்ளது. (சி-16)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



அறவாழி அந்தணன் தாள்
சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது
-குறள்

# வலம்புரி

## புதிய சமுதாயம்

உழுத்துப்போன சமுதாயத்தைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். அந்தச் சமுதாயத்தில் அட்டகாசங்களும் அலுத்துப்போன செயற்பாடுகளும் வேண்டாம் வேண்டாமென்றாகி விட்டது. ஏற்றத்தாழ்வுகள், திறந்த வெளிக்கொலையாளிகள் கொள்ளையர்கள் என்றெல்லாம் மலிந்துபோன சமூகம் இருக்கவா வேண்டும் என்று அலுக்கும் நிலையில் நாங்கள்.

இதற்கான மாற்றம் என்ன? எங்கிருந்து தொடர்வது? இதன் சிருஷ்டிகர்த்தாக்கள் யார்! என்று சிந்திப்போமானால் மாணவப் பருவத்திலிருந்து சமூகம் சிருஷ்டிக்கப்பட வேண்டும். சிருஷ்டிகர்த்தாக்கள் நல்லாசிரியர்களே என்ற விடை காணப்படும்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெரும்பகுதி கல்விக்குச் செலவிடப்படுகிறது. எங்கள் நாட்டில் யுத்த செலவீனத்துக்கு அடுத்தபடியாக, இன்றைக்கு ஆசிரிய உலகிற்கு கவர்ச்சிகரமான வேதனம் உண்டு. எனவே சாதனை ஒன்றே அவர்கள் வேலை. ஆசிரியர்கள் உண்மையின் மீது அன்பும் பற்றும் எடுத்த பணியில் முழுமையான ஈடுபாடும் பற்றுறுதியும் விடா முயற்சியும் கொண்டவர்களாக விளங்க வேண்டும். டாக்டர் மு.வ. விளம்பியது போல அரைத்துறவியாகவும் இருக்கவேண்டும். சுருங்கக்கூறின் உதாரண புருஷர்களாக வேண்டும்.

இளந்தலைமுறையினர் ஒழுக்க சீலராய் வாழும் நெறியறிந்து தத்தம் சமயத்தின்பால் பற்றுக்கொண்டு வாழவேண்டும். வேண்டாதவற்றை செய்ய முயலக்கூடாது. பெற்றோருக்கும் மற்றோர்க்கும் கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும்-ஒரு நல்லவனை எடுத்துக்கொண்டால் அவனை வல்லவனாக்கி விடலாம். ஆகவே ஒழுக்க சீலம் முதலாக வேண்டும்.

பிஞ்சு உள்ளங்களில் பதியவைப்பன சுடுகாடு மட்டும் தொடரக் கூடியன. எனவே மாசுபடியா வண்ணம் மனங்கவர் ஒழுக்க நெறிகளை உணர்த்துவதே குருத்தொழிலின் குறிக்கோளாக வேண்டும். சமுதாய ஆக்கத்திற்கு உந்து சக்தியாகும் ஆசிரிய சமுதாயம் வன்மையுடையவராய் விருத்தி காண வேண்டும். தாம் பெற்ற செல்வம் பெறுக தம் மாணவர் என்ற புனித நிலை உருவாக வேண்டும் அந்நிலையில் புதிய சமுதாயம் உருவாகும்.

-அன்புடன் ஆசிரியர்

---

# அகமும் புறமும் தமிழன் வாழ்வின் இருபகுதிகள்

# சங்க இலக்கியங்கள் இயம்பும் பாடங்கள் இவை

## அந்தி சாயின் அகநானூறு பொழுது விடியின் புறநானூறு

(சென்னை)

ஈராயிரமாண்டு தமிழர்கள் வரலாற்றில் இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன் ஈரமே அறமாக, தியாகமே வாழ்வாக கொண்ட இராஜேந்திர சோழ மன்னன் காலத்தில் தமிழர்கள் படை சிங்களம், புட்பகம், சாவகம் ஆகிய பல்வேறு தீவுகள் சென்று, வென்று புலிக்கொடி நாட்டி வந்தது.

ஆயிரம் ஆண்டுகளின் பின் ராஜேந்திர சோழன் வழி வந்தவர்கள் மீளவும் புலிக்கொடி நாட்டியிருக்கிறார்கள்.

இது நமக்கு ஒரு செய்தியை சொல்லி நிற்கிறது. தமிழனுக்கும் தமிழருக்கும் வீழ்ச்சி என்பது ஒருபோதுமே கிடையாது என்பதுவே அதுவாகும்

இது தமிழீழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் அதற்கும்பால் பரந்து வாழ்கின்ற உலகத் தமிழர் அனைவரிடையேயும் பேரெழுச்சியையும் விடுதலை பற்றிய விரிவான எண்ணப்பாட்டினையும் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு தமிழீழ ஆதரவாளரும், தமிழ் - தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவருமான பழ. நெடுமாறன் ஆனையிறவு வெற்றிச் செய்தி குறித்த தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

### புஷ்பவனம் குப்புசாமி

ஆனையிறவைப் புலிகள் வெற்றி கொண்டது தொடர்பாகத் தமிழீழ ஆதரவாளரும், தமிழ் உணர்ச்சிப் பாடல்களைப் பாடிவருபவருமான புஷ்பவனம் குப்புசாமி கருத்துத் தெரிவிக்கையில்,

''நேற்றுப் போட்ட புதுச் சட்டை இன்று கிழிந்துபோகலாம். ஆனால், நேற்று நாம் அள்ளிக் கொடுத்த வெள்ளிப் பணங்கள் வீண் போகவில்லை.

வெற்றிச் செய்திகளாக விடுதலைக்கு ஏற்றப்பட்ட விளக்குகளாக அவையெல்லாம் கண்முன்னே காட்சி தருகின்றன.

இது இன்னுமின்னும் தொடர வேண்டுமானால் வெற்றிகள் நிலைக்க வேண்டுமானால் புலம்பெயர் தமிழர்களின் நிதியளிப்புப் பணி தொடர வேண்டும்'' என்றார்.

### சுப. வீரபாண்டியன்

ஆனையிறவுத் தள வீழ்ச்சி தொடர்பாகப் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஐ.பி.சி தமிழுக்கு அளித்த செவ்வியில்

''அகமும் புறமும் தமிழன் வாழ்வின் இரு பகுதிகள். அந்தி சாய்ந்தால் அகநானூறு. பொழுது விடிந்தால் புறநானூறு. இதுதான் சங்க இலக்கியங்கள் பாடல்கள் மூலமாய் எமக்குச்சொல்லித் தந்திருக்கின்ற பாடங்கள்.

இந்தப் புறநானூறை ஈழத்து வீரர்கள்தான் புதுப்பித்திருக்கிறார்கள்.

தமிழகத்துத் தமிழர்கள் எல்லாம். பழம்பெருமை பேசிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே மிகவும் அற்புதமான அருமையான புறநானூற்றுக் காட்சிக்குச் சான்று சேர்த்திருக்கிறார்கள் ஈழத்து இளையவர்கள்.

அமெரிக்காவின் அதியுயர் இராணுவப் பயிற்சி பெற்ற உலக நாடுகளின் உயர்ந்த தயாரிப்புக்களைக் கைகளில் ஏந்தி நின்ற ஸ்ரீலங்கா படைகளைப் புறமுதுகிட்டோடச் செய்த ஈழத்து வீரர்களின் மாவீரம் கண்டு நான் தலை வணங்குகிறேன்.

விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்ற. போராட்டத்தின் மூலம் விடுதலை கண்டிருக்கின்ற நாடுகளை நோக்கினால் ஒன்று நன்கு புரியும்.

அது என்னவென்றால் அவ்வாறான நாடுகள் ஒவ்வொன்றின் பின்னாலும் வல்லரசு நாடுகளின் வலுவான பின்னணிகள் இருப்பதை உணரலாம். பல்வேறு நாடுகளின் ஆதரவுப் பார்வைகளும் அனுசரணைகளும் இருப்பதைக் காணமுடியும்.

ஆனால் இவ்வாறான எந்தவொரு ஆதரவுமின்றித் தனித்து நின்று, வல்லரசு நாடான அமெரிக்காவின் பக்கபலம் கொண்ட படைகளைச் சிதறடித்திருப்பதானது விடுதலைப் புலிகள் படைத்த வரலாற்றின் புதியதோர் அத்தியாயம்.

எனவேதான் நான் கூறுகிறேன். ருவாண்டாவிலும், கொசோவோவிலும் நடக்கின்ற போராட்டங்களை உன்னிப்பாய்ப் பார்க்கின்றவர்களே, இந்தச் சின்னத் தீவில் தனித்து நின்று போராடுகின்ற செந்தமிழ்ச் சிங்கங்களையும் சற்றே திருப்பிப் பாருங்கள் அவர்கள்கொண்ட கொள்கைகளை வாழ்வில் அனுபவிக்க வழிவிடுங்கள்' என்று தெரிவித்தார். [உ-கி']

---

# 'புதிய ஆசிரியர்கள் வட-கிழக்கின் கஷ்டப் பிரதேசத்துக்கே அவசியம்'

## பொது ஆசிரியர் சங்கம் வலியுறுத்தல்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதிதாகத் திரட்டப்படவிருக்கும் 1250 தமிழ்மொழி மூல ஆசிரியர்களும் கஷ்டப்பிரதேசங்களில்உள்ள பாடசாலைகளுக்கே நியமனம் செய்யப்பட வேண்டும் என்று வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளரைக் கோரியுள்ளது.

புதிதாகத் திரட்டப்படும் ஆசிரியர்களை எக் காரணம் கொண்டும் நகரப்புறம் பாடசாலைகளுக்கு நியமிக்கக் கூடாது, என சங்கத்தின் இணைச் செயலாளர் ஆர். ஜெரோம் மாகாண அமைச்சின் செயலாளர் எஸ். பரமேஸ்வரனுக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

'வடக்கு-கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களிலும் நியமிக்கப்படுவதற்காக 1250 தமிழ் மொழி மூல ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சில வாரங்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. வடக்கு-கிழக்குமாகாண கஷ்டப் பிரதேசங்களில் கூடுதலான ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன, என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## பாலஸ்தாபனம்

(புலோலி)

மேலைப் புலோலி மலையரு தோட்டம் தம்பசிட்டி ஸ்ரீமுருகன் ஆலய பாலஸ்தாபனம் கிரியைகள் 23ம் திகதி ஆரம்பமாகி 24ம் திகதி திங்கட்கிழமை காலைஅபிஷேகம் தீபாராதனைகளுடன்பூசைகள் நிறைவு பெற்றன. திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

[சி-52]

# தென்மராட்சி ப. நோ. கூ சங்க கிளை கோப்பாயில் அமையவுள்ளது

(தென்மராட்சி)

தென்மராட்சிபிரதேச செயலர் பிரிவிலுள்ள மறவன்புலவு, தனங்களப்பு, கைதடி, நாவற்குழி கிராம சேவகர்கள் பிரிவுகளில்இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் இருக்கும் குடும்பங்களின் வசதிகருதி தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் கோப்பாயில் அதன்கிளை ஒன்றினை நிறுவவுள்ளதாக சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இக்குடும்பங்கள் தமது நிவாரணப்பொருட்களைப் பெறுவதற்கு கைதடிக்கு வரவேண்டிய நிலைமையைக் குறைக்கும் பொருட்டே இக்கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(சி-77)

## கலைவிழா

(கல்வியங்காடு)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் நடத்தவுள்ள கலைவிழா நிகழ்ச்சியில் நடிப்பதற்கு ஆற்றல் உள்ள நடிக, நடிகையர்கள் தேவைப்படுவதாக மேற்படி சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

[சி-54]

# அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக பாடசாலை மட்டத்தில் ஆங்கில தினப் போட்டிகள் நடைபெற உள்ளன.

யூன் மாதம் பத்தாம் திகதிக்கு முன்பதாக பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர், பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் யூன் பதினைந்தாம் திகதி கோட்டமட்டப் போட்டியிலும், கோட்டமட்டப் போட்டியில் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் யூன் இருபத்தைந்தாம் திகதி வலயமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றுவார்கள். வலய ரீதியாக தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

இது தொடர்பான சுற்று நிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளது. (3-சி)

# நியமனம், இடமாற்றம், மீளாய்வு செய்ய வட. கிழக்கு ஆளுநர் பணிப்பு

## எம். பிக்கள் முறையிட்டதன் எதிரொலி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யுமாறு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலான மீள் நியமனங்கள், அமைய எழுதுவினைஞர் நியமனங்கள், உத்தியோகத்தர் இடமாற்றங்கள் ஆகியவற்றில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஆளுநரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது முறைப்பாடு தெரிவித்ததையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் முன்னாள் செயலாளர் இடமாற்றம் செய்யப்பட்டு, தற்போதைய மாகாணக்கல்விச் செயலாளர் பதவியேற்ற இடைக்காலப் பகுதி வரையில் மேற்கொள்ளப்பட்ட சகல நியமனங்களையும், இடமாற்றங்களையும் ரத்துச்செய்யுமாறும் ஆளுநர் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# சிறைச்சாலை கைதி மரணம்;பொலிஸ் கோரிக்கை நீதிமன்றால் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் கடந்த 2 ஆம்தி தி உயிரிழந்தவரின் மரணம் தொடர்பாக அங்குள்ள 2 சந்தேக நபர்களை விசாரணைசெய்ய அனுமதி தருமாறு யாழ். குற்றத்தடுப்புப்பிரிவுபொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. தம்மிக யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் அனுமதிகோரியதற்கிணங்க நீதிமன்றம் அதற்கு அனுமதிவழங்கியது.

இறந்த கைதியின் பிரேத பரிசோதனையின் போது கழுத்துத் திருகப்பட்டிருப்பதாக யாழ் சட்ட வைத்திய அதிகாரி தமது வைத்திய அறிக்கையில் தெரிவித்திருந்தது. குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். மேலதிக நீதவான் ஆர். ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (சு)

# வரணி மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினர் குவிப்பு

வரணிப் பிரதேசத்தில் உள்ள வரணி மகாவித்தியாலயத்தில் பெருமளவு இராணுவத்தினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து வாகனங்களில் மேலும் இராணுவத்தினர் வந்து குவிந்தவண்ணமிருந்தனர்.

ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்த படைகளையே இங்கு கொண்டுவந்து குவிக்கப்படுவதாகப் பேசப்படுகிறது. (சி-39)

## பன்றி மீது மேற்கொள்ளப்பட்ட

# துப்பாக்கிப் பிரயோகமானது நோயாளி சென்ற காரைத் தாக்கியது

## மந்துவிலில் சம்பவம்

(மந்துவில்)

பன்றியின் மீது மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிப் பிரயோகம் தவறுதலாக நோயாளியைக் கொண்டு சென்ற காரைத் தாக்கியது.

மந்துவிலிருந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நோயாளியை ஏற்றிச்சென்ற காரின் மீதே மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

காரைத் துப்பாக்கி சன்னங்கள் தாக்கியதாகவும் எனினும் காரில் சென்றவர்களுக்கு எதுவித காயமும் ஏற்படாமல் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-39)

# புலிகள்மீதான தடையை நீக்க தமிழக முதல்வரிடம் கோரிக்கை

## அனைத்துலக தமிழர் ஒன்றியம் விடுத்தது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்குப் பரிந்துரை செய்யுமாறு கோரி சுவிற்சர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் ஒன்றியம் தமிழக முதல்வர் மு,கருணாநிதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஒன்றியம் சார்பாக செயலாளர் பொன். செல்வராஜா கையொப்பமிட்டு இக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

விடுதலைப்புலிகளை இந்திய அரசு 1991 ஆம் ஆண்டு முதல் தடைசெய்தும் 1996 ஆம் ஆண்டு முதல் இரு வருடங்களுக்கு ஒரு முறை இத் தடை உத்தரவைப் புதுப்பித்தும் வருகின்றது.

எதிர் வரும் மே மாதம் 14 ஆம் திகதி மீண்டும் இத் தடை உத்தரவு புதுப்பிக்கப்படவுள்ளது.

நீங்கள் முதலமைச்சராக இருக்கும் இக்காலத்தில் மீண்டும் ஒரு முறை புலிகள் மீதான தடையைப் புதுப்பிக்காமல் இருக்க உங்களாலான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். ஈழத் தமிழ் மக்களின் காப்பரண்களாக விளங்கும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகக் காட்ட இலங்கை அரசு முனைகின்றது.

எனவே 6 கோடி தமிழர்களின் முதல்வராகவும் 8 கோடி தமிழர்களின் தலைவராகவும் உள்ள நீங்கள் 35 இலட்சம் ஈழத்தமிழர்களின் அவலம் நீங்க அவர்களின் காவலாளிகளான புலிகளின் மீதுள்ள தடையை நீக்கப் பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். என்றுள்ளது. (வ-ச)

# உள்ளூர் தொலைபேசிக் கட்டணம் 20 சத வீதத்தால் அதிகரிப்பு

ஜூன் மாதம் தொடக்கம் உள்ளூர் தொலைபேசிக் கட்டணத்தை 20 சத வீதத்தால் அதிகரிப்பதற்கு ரெலிக்கொம் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரெலிக்கொம் நிறுவனம் சமீபத்தில் சர்வதேச தொலைத் தொடர்புக் கட்டணத்தைக் குறைத்தமையால் 5 மில்லியன் ரூபா நஷ்டம் மேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# கைது செய்யப்பட்டோர் 5 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில்

## நீதிவான் உத்தரவு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு அனுராதபுரம் நீதிமன்றில் இருந்து யாழ். நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட வழக்குகளின் சந்தேக நபர்களாக கருதப்பட்ட மாடசாமி விஜயபாலன் (வயது24) குணபாலசிங்கம் சுரேஸ்குமார், யேசுராசாகுணசீலன் சிவஞானம் பிரதீபன் (வயது 22), சுப்பிரமணியம் விஜயகுமார் (வயது 24). குலோத்துங்கன் கணேஸ் வயது 25) ஆகியோரே காங்கேசன்துறை பொலிசாரால் நேற்றுயாழ் நீதிமன்றில் நீதவான் இ. த. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தபோது ஒவ்வொருவரையும் தலா ஐயாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (க-3)

### பின்வாங்கும்...

அவர் மேலும் தெரிவிக்கையில் ஆனையிறவு முகாமில் கடமையிலிருந்த போது கடந்த 22 ஆம் திகதி புலிகளின் ஆட்லறித் தாக்குதலில் தொலைத்தொடர்பு கோபுரம் சேதமடைந்ததைத் தொடர்ந்து எமக்கு மேலிடத்திலிருந்து அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு வந்தது.

உடனே படையினர் யாவரும்முண்டியடித்துக்கொண்டு ஓடினர். நானும் பின்வாங்கி ஓடினேன், இந்த வேளை கிளாலியூடாக தாக்குதல் நடத்திக்கொண்டு வந்தபுலிகளின் தாக்குதலில் நானும் இன்னும்பலரும் காயமடைந்து பின் பளை முகாமை அடைந்தோம்.

பின்னர் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டேன் என்று அவர் மேலும்தெரிவித்துள்ளார். (வ-ச)

### விரிவுரைகள்

[யாழ்ப்பாணம்]

தொழில் நுட்பக் கல்லூரியின் விரிவுரைகள் யாவும் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். [சி-102]

### இடமாற்றம்..

யான இவர் இடம்மாற்றம் பெற்று ஆனையிறவிலிருந்து மாதுறு ஓயா பயிற்சிக் கல்லூரியின் கட்டளை இடும் அதிகாரியாகச் செல்லஇருந்த வேளை விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ச)

### படையினரின்...

டத்தில் ஆயிரக்கணக்கான படையினரின் உறவினர்களைத் தங்கவைக்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் படையினரின் பெற்றோர்களுக்கு போக்குவரத்துச் செலவு வழங்கப்படும் என்றும் பௌத்த காங்கிரஸ் தலைவர் கூறியுள்ளார்.

இதேவேளை வெண்தாமரை இயக்கத்திற்கு இறந்த காயப்பட்ட படையினரின் உறவினர்களுக்கு உதவ நீதி அரசியல் விவகார நல்லிணக்கப் பதில் அமைச்சர் டிலான் பெரேரா தனது 3 மாதச் சம்பளத்தைவழங்கியுள்ளார். (வ)

### ஆனையிறவை...

தெரிவித்தார்.

ஆனையிறவை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் இத் தாக்குதல் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் விடுதலைப்புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

கிபிர், மற்றும் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர்கள் மூலம் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ-ச)


ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி
காலை 10-30 பி.ப. 2-30
சத்தியராஜ்
அருண்பாண்டியன்
குஷ்பு நடித்த
வீரநடை
(நாளை மட்டும்)
புதிய வெளியீடு
வெள்ளி முதல்
கார்த்திக்-ரோஜா
கௌசல்யா நடித்த
சந்தித்தவேளை


### இராணுவ...

விபத்தில உடுவிலைச் சேர்ந்த மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் முன்னாள்அதிபர் ஏ. ஜி. பெனாண்டோ (வயது 68) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-03)

### 126 இராணுவத்தி...

வர்த்தனா தெரிவித்தார்.

கிளிநொச்சியில், வைத்து நேற்றுப் பகல் 12 மணியளவில் இச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று மாலை வவுனியாவிற்கு எடுத்து வந்து இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்தனர்என்றும் ஹர்ஷா குணவர்த்தனா மேலும் தெரிவித்தார். (வ-ச)

### செம்மணிப்',

நிலையக் குற்றப்புலனாய்வு அதிகாரியாலும் வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரியினாலும் படையினரை தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஆஜர் செய்ய முடியாமைக்கான காரணத்தை விளக்கி யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிக்கு அனுப்பிய செய்தியை நேற்று நீதிவான் இ. த. விக்னராசாவிடம் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமர்ப்பித்தார்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தின் படி சந்தேக நபர்களை உடனடியாக கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்து விளக்கமறியலில் வைக்குமாறு வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் கடந்த 11ந் திகதியன்று சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யாமை குறித்த விபரங்களை குற்றப்புலனாய்வு அதிகாரி லிண்டன் ரட்ணாயக்க, சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோர் இதுவரை சமர்ப்பிக்கவில்லை எனவும் இறந்தவர்களின் எலும்பில் மேற்கொள்ளப்பட்ட டீ. என். ஏ ஆய்வு அறிக்கையை சட்டத்தரணி யசந்தகொட்டகொட மன்றுக்கு சமர்ப்பிக்கவில்லை எனவும்,

இவையாவும் அடுத்த மாதம் 5ந்திகதிக்கு முன் தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (ந-3)

### யாழ்ப்பாணத்தை...

விஜயத்தின் பின் நேற்று நண்பகல் கொழும்பு திரும்பிய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடாத்தியபின் காணும் முடிவை விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கும் போது அவர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

விடுதலைப்புலிகளை வெற்றி கொண்ட பின் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஒரு அமைப்பை தமிழர் பகுதியில் ஆட்சியில் அமர்த்த ஜனாதிபதி சந்திரிகா ஏற்பாடு செய்திருந்த திட்டம் தோல்வியடைந்து விட்டது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு படைத்தளத்தை விடுதலைப் புலிகளிடம் இழந்து விட்டு யாழ்ப்பாணத்தை எவ்வாறு அரசு தக்கவைக்கப்போகிறது என்பது குறித்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பதிலளித்தே ஆகவேண்டும்.

நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் நாட்டில்இல்லாதவேளை இச் சம்பவம் நடைபெற்றுள்ளது,

1983ம் ஆண்டுமுதல் நாம் ஆனையிறவு முகாமைப்பாதுகாத்து வந்தோம். ஆனால் அரசு இப்போது பல்வேறு இராணுவமுகாம்களை இழந்துவருகின்றது. அடுத்தடுத்து வரும் இந்த இழப்பிற்கு முப்படைகளின் தளபதியான சந்திரிகா பதில் கூறியே ஆகவேண்டும்.

இத்தகைய பின்னடைவுகள் அரசுக்கும் ஐ.தே. கட்சிக்குமான பேச்சுக்களில் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது.

இந்தியத் தலைவர்களான பிரதமர் வாஜ்பாயிலிருந்து கலைஞர் கருணாநிதி வரை அனைவரும் இலங்கையின் இனப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட வேண்டுமென்றே விரும்புகின்றனர் இந்தியா மீண்டும் இனப்பிரச்சினையில் தலையிட அவர்கள் விரும்பவில்லை.

இன்றைய அரசாங்கத்தின் தவறான தலைமையும், தவறான வழிநடத்துதலுமே இன்றைய பின்னடைவுகளுக்கு காரணமாகும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது மிக அவசியமானதாகும் என்றும் பிரதமர் வாஜ்பாயை எனக்கு 20 வருடங்களாகத் தெரியும் அவர் விடுதலைப் புலிகளுக்கு உதவுவார் என்பதை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன் என்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இப்பேட்டியின் போது ஐ.தே கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரிய, செயலாளர் காமினி அத்துக்கோறள மற்றும் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோரும் பிரசன்னமாம இருந்தனர். [வ-07]

### புலிகள்...!

இது தொடர்பாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

### தீ விபத்தில். . .

இவ் விற்பனை நிலையத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் எதிர்பாராத விதமாக தீ ஏற்பட்டது.

இத்தீவிபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது கண்டறியப்படவில்லை இது தொடர்பாக பூரண விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது (இ-வ-07)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 26-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது